**தலைப்பு 106 – அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 106 - அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 செப்தம்பர் 22 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,501.92 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 2,485.93 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 1,015.99 மில்லியன் அதாவது 29.00 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,292.50 | 732.96 | 559.54 | 43.29 |
| மூலதனம் | 2,209.42 | 1,752.97 | 456.45 | 20.66 |
| மொத்தம் | **3,501.92** | **2,485.93** | **1,015.99** | **29.00** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 10601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 140.00 | 112.87 | 70.50 | 104.43 | 300.00 | 12.81 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0385/0015/000 ஆம் இலக்க கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 142,077 ஆக காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் கீழான 03 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2.13 மில்லியனாக இருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கின் இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0013/0056/000 | 0.11 |
| 6000/0000/00/0016/0037/000 | 1.98 |
| 6000/0000/00/0012/0079/000 | 0.04 |
| மொத்தம் | **2.13** |

**2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகள் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி |
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii) | கணணி, உபபாகம் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iv) | பெறப்படுகின்ற காசோலைகள், காசுக்கட்டளை போன்றவற்றுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 |
| (v) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (vi) | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் 26 ஆவது பின்னிணைப்பு | பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை |
| (vi) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (vii) | அடியிதழ்சேர் புத்தகங்களின் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 |
| (viii) | வாகன சம்பவத் திரட்டுப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 1645(அ) |
| (ix) | வாகன அட்டவணைப்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

10601 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் நிலுவையாகக் காணப்பட்ட 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 215,893 கூட்டுத்தொகையான மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு எடுத்திருந்த நடவடிக்கைகள் வெற்றியளித்திருக்கவில்லை.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சினால் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

(i) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் அவ்வறிக்கையை 2016 ஒக்தோபர் 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2015 ஆம் ஆண்டிற்குரிய தேசிய அனர்த்த உதவிச் சேவைகள் நிலையத்தின் கணிப்பீட்டு அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதந்துரைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சினால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு 32 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

**(இ) வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

வளிமண்டலவியல் திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபா 3,848,889 பெறுமதியான 3 ரூட் 36.5 பேர்ச் காணி மற்றும் 4 மாடிக் கட்டிடம் 2012 ஆம் ஆண்டிலிருந்து அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அக்காணி மற்றும் கட்டிடத்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அமைச்சின் கட்டிடத்துடன் கூடிய காணியை கையளிக்குமாறு காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு 2016 சனவரி 09 மற்றும் 2016 ஏப்ரல் 05 ஆந் திகதிய கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அரச நிறுவனங்களை கொழும்பிற்கு வெளியே கொண்டு செல்லும் நடவடிக்கை எடுத்து வருவதால் வளிமண்டலவியல் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியை அமைச்சிற்கு கையளிப்பதனை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

3.4 **இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| நிதிப் பிரமாணம் 104(3) | - | வாகன விபத்தொன்று இடம்பெற்று 7 நாட்களுக்குள் ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சிற்கு சொந்தமான விபத்திற்குட்பட்டிருந்த வாகனங்கள் தொடர்பாக குறித்த தரப்பினர் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | |
| (i) 2.8.3 வழிகாட்டி | 988,475 | திரைச்சீலை கொள்வனவு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் விதந்துரைகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) - மேற்படி - | 1,782,828 | பென்றி கபட் தயாரிப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் விதந்துரைகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) 2.14.1 வழிகாட்டி | 988,475 | ரூபா ஒரு மில்லியன் வரை மதிப்புள்ள பொருட்கள் கொள்வனவிற்காக குறைந்தது 3 நிறுவனங்களிடமிருந்து கேள்வி கோரப்பட வேண்டிய போதிலும், ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் கேள்வி கோரப்பட்டு அந்நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iv) 4.3.1 மற்றும் 4.3.2 வழிகாட்டிகள் | - | மழைமானி கொள்வனவின் போது மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) 7.7 வழிகாட்டி | | மழைமானி கொள்வனவிற்கு மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமையால் கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறு விலைகளை ஒப்பிடுவதற்கு முடியாதிருந்தது. |

## 3.5 வெளிநாட்டுச் செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் 03 செயற்திட்டங்பன் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது.செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அதன் மதிப்பிடப்பட்ட கிரயங்களின் கூட்டுத்தொகை ரூபா 249.22 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் போது ரூபா 54.78 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இவ் வெளிநாட்டுச் செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வெளிநாட்டுச் செயற்திட்டங்களின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) காலநிலை மாற்றத்திற்கான மீட்சிக்கான ஆதரவான செயற்திட்டத்தின் கீழ் 2015 செப்தம்பர் 03 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வேலைத்திட்டத்தின் பிரகாரம் ரூபா 172.12 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடு செயற்திட்டத்தின் ஆரம்ப முதலீட்டுக் கிரயமான ரூபா 422.54 ஆல் 40.74 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தது. மேலும் 2015 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தின் உள்ளவாறான நிதியத்தின் பயன்பாடு ரூபா 148.14 மில்லியனாக இருந்ததுடன் அது செயற்திட்டத்தின் ஆரம்ப முதலீட்டு கிரயத்தின் 35.06 சதவீதமாக இருந்தது.

(ii) அனர்த்த இடர் முகாமைத்துவத்திற்காக மாற்றத்திற்கான மீட்சிக்கான ஆதரவான செயற்திட்டத்தின் பிரதான நுழைவிற்கு இணங்கும் செயற்திட்டத்தின் கீழ் கிடைத்திருந்த ரூபா 34.09 ஆன நிதிஏற்பாடுகளில் ரூபா 12.36 ஆன நிதிஏற்பாடு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது, அதில் ரூபா 21.73 ஆன நிதிஏற்பாடு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மீள அனுப்பியிருக்கவில்லை.

மேலும் செயற்திட்டத்தின் பிரதான செயற்பாடுகளுக்கிடையே வடக்கு கிழக்கு மாகாணங்களின் 10 நகரங்களுக்காக அனர்த்த தடுப்புக்களை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, அதன் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களின் பதவியணியினருக்காக அனர்த்த எச்சரிக்கை முகாமைத்துவம் தொடர்பான இயலளவினை மேம்படுத்தல் செய்யப்பட வேண்டியிருந்தது. அவ்விரண்டு கூறுகள் செயற்திட்டங்களை செயற்படுத்தப்பட்ட காலஎல்லையினுள் ஆரம்பித்து பூர்த்தி செய்வதற்கு செயற்திட்ட முகாமைத்துவம் தவறியிருந்தது.

(iii) காலநிலை மாற்றத்திற்கான மீட்சிக்கான ஆதரவான செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நிக்கவரட்டி குளத்தின் சேற்று மண் முறையாக அகற்றப்படாமையால் நீரியல் வளங்கள் பாரியளவில் வளர்ந்திருந்தமை, குளக்கட்டு குருணிக்கல் மண் இட்டு பதப்படுத்தப்பட வேண்டிய போதிலும், முறையாக நிறைவேற்றப்படாமையால் குளக்கட்டு தொடர்ச்சியாக வெடிப்பு ஏற்பட்டிருந்தமை, அணைக்கட்டு முறைமை தயாரிக்கப்படாமை மற்றும் 4 போகங்களில் வயல் பயிர்ச்செய்கைக்கு உட்படாமை போன்ற குறைபாடுகள் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

- அளவீட்டுப் பத்திரத்தின் பிரகாரம் மருத பலகைகள் இறுதி பட்டியல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்குப் பின்னரும் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், குளக்கட்டில் நீர்க் கசிவு இடம்பெறுவது அவதானிக்கப்பட்டது.

(ஆ) வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட சில செயற்திட்டங்கள் கைவிட்டிருத்தல்.

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) காலநிலை மாற்றத்திற்கான மீட்சிக்கான ஆதரவான செயற்திட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வேலைத் திட்டத்தின் பிரகாரம் விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு நேர்ந்திருந்தது. மீளாய்வாண்டின் போது அந்நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் 2015 திசெம்பர் 29 ஆந் திகதி முற்பணமாக ரூபா 10,823,520 தொகை தலைமைச் செயலாளருக்கு (வடமேல்) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) காலநிலை மாற்றத்திற்கான மீட்சிக்கான ஆதரவான செயற்திட்டம் மற்றும் தொடர்பாக செயற்படுத்தப்பட்ட திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 21,596,740 செலவு செய்து 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போசணையூட்டப்பட்ட பேடுகள் செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

(iii) 2015 ஆம் ஆண்டிற்குரிய காலநிலை மாற்றத்திற்கான மீட்சிக்கான ஆதரவுச் செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 4,685,140 ஆன நிதிஏற்பாட்டுன் தேசிய, மாவட்ட மற்றும் கிராமிய மட்டத்தில் உத்தியோகத்தர்களுக்காக காலநிலை மாற்றத்தின் அனர்த்த நிலைமையைக் குறைப்பதற்கான அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்தது.

(iv) செயற்திட்டத்தின் கீழ் பயிற்சியளித்தல் நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) செயற்திட்ட நடவடிக்கைளை அடிப்படையாக கொண்டு பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மற்றும் குளம் தொடர்பான நடவடிக்கைகள் குருணாகல் மாவட்டத்தில் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) செயற்திட்டங்களின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் விளைவற்றுக் காணப்பட்டன.**

---

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்படும் திவிநெகும செயற்திட்டத்தின் மூலம் 2015 மே 20 ஆந் திகதி காலநிலைக்கு ஈடுகொடுக்கக் கூடிய செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட 08 வகைப் பொருட்களில் 36 பொருள் உருப்படிகள் பயன்படுத்தப்படாமல் 09 மாத காலமாக செயற்திட்ட முகாமைத்துவ அலகு களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. 2015 மே 20 ஆந் திகதி வாரியப்பொல வெளிக்கள அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட 9 வகைப் பொருட்களில் 10 உருப்படிகள் 2016 பெப்ரவரி 17 ஆந் திகதி பௌதீக பரிசோதனை சந்தர்ப்பம் வரையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 செயலாற்றல்**

---

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

இயற்கை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் 71 வீடுகளை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது 24 மாவட்டங்களுக்கு ரூபா 35.50 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் 7 மாவட்டங்களில் 21 வீடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே 2014 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த 145 வீடுகளில் 24 வீடுகள் 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்ய்பபட்டிருந்ததுடன் எஞ்சிய 42 வீடுகளை 2016 யூலை மாதம் வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.7 நட்டங்களும் சேதங்களும்

சீன அரசின் உதவியாக கிடைக்கப்பெற்ற 3000/KVA இயலளவிலான 2 டீசல் மின்பிறப்பாக்கிகள் துறைமுகத்திலிருந்து விடுவிக்கும் போது தாமதித்த காரணத்தினால் தாமதக் கட்டணங்களாக ரூபா 3.30 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே அப்பொருட்கள் தொடர்பாக ரூபா 35.01 மில்லியன் வரி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இம்மின்பிறப்பாக்கிகள் இரண்டும் இலங்கை மின்சார சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

### 3.8 மனித வளங்கள் முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 20 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 445 | 393 | 52 |
| (iv) | ஆரம்ப நிலை | 47 | 34 | 13 |
| | மொத்தம் | 519 | 449 | 70 |

**(ஆ) காலநிலை மாற்றத்திற்காக இசைவாக்கல் செயற்திட்டத்தின் மனித வளங்கள் முகாமைத்துவம்**

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்கள், அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அந்த உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்த பதவிப் பெயர்கள் மற்றும் பதவிகளின் எண்ணிக்கை என்பவற்றிற்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | அங்கீகரிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை | அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த பதவிப் பெயர் | வழங்கப்ப ட்டிருந்த பதவிப் பெயர் | பதவி எண்ணிக்கையில் வேறுபாடு |
|---|---|---|---|---|
| செயற்திட்ட முகாமைத்துவ அலகு | | | | |
| செயற்திட்ட உத்தியோகத்தர் | 01 | - | - | 01 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 03 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 | 01 |
| சாரதி | 01 | - | - | 01 |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | | அனர்த்த முகாமைத்துவ முகாமைத்துவ | | |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | - | - | 01 |
| - | - | முகாமைத்துவ உதவியாளர் | 02 | (02) |
| மாவட்ட செயலகம் | | | | |
| பிரதி செயற்திட்ட கூட்டிணைப்பாளர் | 03 | - | - | 03 |
| மொத்தம் | **09** | | **04** | **05** |

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகள் மற்றும் செயற்பாடுகள் தற்போது செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுகின்ற அனர்த்த முகாமைத்துவ அலகின் பதவிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் திருத்தம் செய்வதற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு நடவடிக்கைகளை மேகொண்டிருக்கவில்லை.